தகவல் அறிபும் உரிமை சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 17.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 5486/A/2019**

திரு T.R. வெங்கடேசன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம், -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட காவல் அலுவலகம்,
கோவை மாவட்டம்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 29.01.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், கருமத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு 22.11.2018 தேதியிட்டு அனுப்பிய புகார் மனு சம்மந்தமாக 5 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 01.03.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். திருப்தியடையாத மனுதாரர் 19(1)-ன் கீழ் 09.04.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 25.05.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் 15.06.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப் படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 14.10.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 23.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான

தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 05.11.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. பொதுத் தகவல் அலுவலர், தமது ந.க.எண்.106-2019/தஅஉச/பொ.த.அ/ கோயம்புத்தூர் மாவட்டம்-19, நாள் 22.10.2020 என்ற கடிதத்தில் மனுதாரரின் கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களை வழங்கியமைக்கான சான்றாக அவற்றின் நகல்களை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்து தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்தார். **ஆகவே இவ்வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். SA 5486/A/2019</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
கோவை மாவட்டம்.

<u>மனுதாரர்</u>
திரு T.R. வெங்கடேசன்,
எண்.8/287, இந்திரா காலனி,
செம்மாண்டாம்பாளையம் அஞ்சல்,
சூலூர் வட்டம்-641 668.
கோயமுத்தூர் மாவட்டம்.
*PR/PS 18/11/2020*

# <u>தமிழ்நாடு காவல் துறை</u>

அனுப்புனர்

பொது தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்,
கோவை மாவட்டம்.

பெறுநர்

மாநில தலைமை தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்-2, தியாகராயர் சாலை,
(ஆலயம்மன் கோவில் அருகில்),
தேனாம் பேட்டை,சென்னை-600018

**<u>ந.க.எண். 106- 2019 த.அ.உ.ச / பொ.த.அ /கோயம்புத்தூர்.மாவட்டம் -19. நாள். 22.10.2020.</u>**

**<u>அய்யா,</u>**

TAMILNADU INFORMATION COMMISSION
038148
29 OCT 2020
CHENNAI 600 018

**பொருள்** : காவல் துறை - கோவை மாவட்டம் - த.அ.உ.ச.2005-ன் படி தமிழ் நாடு தகவல் ஆணையத்திற்கு மனுதாரர் திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன், கோவை என்பவர் 15.06.2019 நாளிட்டு 2 வது மேல்முறையீடு செய்ததின் பேரில் மாநில தலைமை தகவல் ஆணையர் பிறப்பித்த ஆணை எண். SA5486/A/2019 நாள் 14.10.2020 உத்தரவின்படி மனுவிற்கான பதில் அளித்தல் – தொடர்பாக.

**பார்வை** :

1. த.த ஆணையம். வழக்கு எண். SA 5486/A/2019 நாள் 14.10.2020
2. மனுதாரர் திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன், கோவை என்பவரின் மனு நாள் 29.01.2019
3. ந.க.எண். 106-19/ த.அ.உ.ச/ பொ.த.அ/ கோயம்புத்தூர் மாவட்டம் 2019 நாள் 01.03.2019
4. ந.க.எண். 11/ KMPT- PS/RTI/CBE-DT/19 dt. 19.02.2019

-oOo-

மனுதாரர் திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன், கோவை என்பவர் 15.06.2019 நாளிட்டு தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பிய இரண்டாம் மேல்முறையீட்டு மனுவிற்கான பதில் தகவல்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் 29.01.2019 நாளிட்டு தகவல் கேட்டு அனுப்பிய மனுவானது இவ்வலுவலகத்தில் 30.01.2019-ம் தேதி அன்று பெறப்பட்டு அதற்கான பதில் தகவலை பெற கோவை மாவட்ட, கருமத்தம்பட்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலக மூலமாக பெறப்பட்ட பதில் தகவல்களை மனுதாரருக்கு 11.03.2019-ம் தேதி அன்று பதிவு அஞ்சல் மூலம் இவ்வலுவலக கடித எண் ந.க.எண்.106/2019-ன்படி இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

அப்பதில் தகவல்கள் மனுதாரருக்கு திருப்தியில்லையென தமிழ்நாடு தகவல் ஆணையத்திடம் 15.06.2019 ஆம் தேதி இரண்டாம் மேல்முறையீடு செய்துள்ளார். அதன் பேரில் மாநில தலைமை தகவல் ஆணையர் பிறப்பித்த ஆணை எண். S.A 5486/A/2019 நாள் 14.10.2020ன் படி மனுதாரர் கோரிய தகவல்களை முறையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு காவல் ஆய்வாளர், கருமத்தம்பட்டி காவல் நிலையம், கோவை மாவட்டம் அவர்களுக்கு 16.10.2020 ஆம் தேதி பதில் தகவல் கோரி அனுப்பப்பட்டு 22.10.2020 அன்று பதில் தகவல்கள் பெறப்பட்டு மனுதாரருக்கு 22.10.2019-ம் தேதி அன்று பதிவு அஞ்சல் மூலம் இவ்வலுவலக கடித எண் ந.க.எண்.106/2019-ன்படி இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

22/10/2020

பொது தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் - தலைமையிடம்
கோவை மாவட்டம்.

**<u>இணைப்பு</u>**

மேற்கண்டவாறு

## காவல் துறை

**அனுப்புநர்**

பொது தகவல் அதிகாரி/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
கோவை மாவட்டம்.

**பெறுநர்**

திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன்,
மாநில பொது செயலாளர்,
ஆதித்தமிழர் மக்கள் பேரவை.
8/287, இந்திரா காலனி,
செம்மாண்டம்பாளையம்(அஞ்சல்),
சூலூர், கோவை-641668.

**ந.க.எண்.106-19/ த.அ.உ.ச / பொ.த.அ.கோ.மா /2019. நாள்.22.10.2020.**

**அய்யா,**

**பொருள்** : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்கீழ் மனுதாரர் மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு செய்து அதன்மீது தகவல் ஆணையம் பிறப்பித்த உத்தரவின்படி தங்களது மனுவிற்கு பதில் அனுப்புதல் - சம்மந்தமாக.

**பார்வை** :

1. த.த ஆணையம். வழக்கு எண். S.A 5486/A/2019 நாள் 14.10.2020
2. மனுதாரர் திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன்,என்பவரின் த.அ.உ.ச மனு நாள் 29.01.2019
3. ந.க.எண். 106-19/ த.அ.உ.ச/ பொ.த.அ/ கோயம்புத்தூர்மாவட்டம் 2018. நாள் 01.03.2019
4. ந.க.எண். 11/KMPT – PS/RTI/CBE-DT/19 dt. 19.02.2019

-o0o-

மனுதாரர் திரு.சேவை செம்மல் D.R.வெங்கடேசன், மாநில பொது செயலாளர், 8/287, இந்திரா காலனி, செம்மாண்டம்பாளையம் (அஞ்சல்), சூலூர், கோவை-641668. என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் 29.01.2019 ஆம் தேதி அனுப்பிய மனு மீது கோவை மாவட்ட, கருமத்தம்பட்டி உட்கோட்ட, கருமத்தம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து 20.02.2019 ஆம் தேதி பதில் தகவல்கள் பெறப்பட்டு மனுதாரராகிய தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பதில் தகவல்கள் மீது தங்களுக்கு திருப்பித்தியில்லையென தமிழ்நாடு தகவல் ஆணையத்திடம் 15.06.2019 ஆம் தேதி மேல்முறையீடு செய்துள்ளீர். அதன்பேரில் மாநில தலைமை தகவல் ஆணையர் பிறப்பித்த ஆணை எண். S.A 5486/A/2019 நாள் 14.10.2020 உத்தரவின்படி தங்களது மனுவிற்கான உரிய பதில்களை மீண்டும் காவல் ஆய்வாளர், கருமத்தம்பட்டி காவல் நிலையம், கோவை மாவட்டம் அவர்கள் அலுவலகத்தலிருந்து 22.10.2020 அன்று பெறபட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொது தகவல் அதிகாரி /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
கோவை மாவட்டம்.

**இணைப்பு.** மேற்கண்டவாறு.

**நகல் -** மாநில தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை.

# தமிழ்நாடு காவல்துறை
## தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005

அனுப்புநர்
காவல் ஆய்வாளர்
கருமத்தம்பட்டி காவல் நிலையம்
கோவை மாவட்டம்

பெறுநர்
பொது தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
கோவை மாவட்டம்

அய்யா

ந.க.எண் - 106/RTI/19/CBE Dist Date – 02-02-2019

பொருள் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன்கீழ் திரு.வெங்கடேசன் கோவை என்பவரது மனுவிற்கு பதிலறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக.

பார்வை ந.க.எண்-11/KMPT PS/RTI/19

| வ.எண் | கேள்வி | தகவல் |
|---|---|---|
| 1 | கடந்த 22.11.18 ஆம் தேதி அனுப்பிய பதிவு தபால் புகார் மனு சம்மந்தமாக கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் ஏற்பு சான்று பதிவு செய்யப்பட்டுள்ளதா என தகவல் தரவும். | மனுதாரர் மனு சம்மந்தமாக அந்த சமயத்தில் நடைபெற்ற குறிப்பிட்ட சமுதாயத்தினரிடையே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு கொடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் மனுதாரரிடம் பெறப்பட்ட புகாரின்பேரில் 20.10.2020-ம் தேதி பெற்ற புகார் மனுவிற்கு CSR.No.321/2020 பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. |
| 2 | மேற்படி புகார் மனு சம்மந்தமாக புகார் ஏற்பு சான்று நகல் தரவும். | |
| 3 | மேற்படி புகார் மனு சம்மந்தமாக இதுவரையில் யார் யார் விசாரிக்கபட்டுள்ளார் என தகவல் தரவும். | |
| 4 | மேற்படி புகார் மனு சம்மந்தமாக விசாரணை செய்துவரும் காவல் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி குறித்து தகவல் தரவும். | |
| 5 | மேற்படி புகார் மனு சம்மந்தமாக கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் எதிராளிகள் மீது ஏதேனும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என தகவல் தரவும் | |
| 6 | எனது புகார் மனு சம்மந்தமாக கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் வரப்பெற்ற மொத்த மனுக்கள் எத்தனை என தகவல் தரவும் | |
| 7 | எனது மனு சம்மந்தமாக கருமத்தம்பட்டி காவல் நிலையம் மூலம் எனக்கு கடிதம் மூலம் ஏதாவது தகவல் தரப்பட்டுள்ளதா என தகவல் தரவும். | |
| 8 | எனது மனு மீது எத்தனை தீர்வு காணப்படும் எனத் தகவல் தரவும் | |
| 9 | என்ன காரணத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது எனத் தகவல் தரவும். | |
| 10 | மேல்முறையீட்டாளரின் முழு முகவரி | காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கோவை மாவட்டம் |

காவல் ஆய்வாளர் 1/11/2020
கருமத்தம்பட்டி காவல் நிலையம்
கோவை மாவட்டம்